சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ். 87/2021

**PW 2 - ரங்கசாமி** **05.11.2024**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பெரும்பதியில் குடியிருந்து வருவதற்கு ஆதார் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போதும் பெரும்பதியில் குடியிருந்து வருகிறேன். பெரும்பதியில் பூமி இல்லை, அரசு அளித்த வீடு மட்டும் உள்ளது. கந்தசாமி கவுண்டரின் மனைவி பெயர் சின்னதங்கம் ஆகும். கந்தசாமிகவுண்டரின் மகள் பர்வதம் பெரும்பதியில் குடியிருந்து தற்போது இறந்துவிட்டார். பர்வதத்தின் கணவர் பெயர் மெத்தை வீட்டு சின்னத்துரை என்பதாகும். கந்தசாமிகவுண்டர் 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். பர்வதம் 25 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். வாதிகள் கேட்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். கந்தசாமி கவுண்டருக்கு பர்வதம் என்ற மகள் இல்லை என்றாலும், அவருக்கு மகன் மட்டுமே வாரிசு என்றாலும் வாதிகள் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெரும்பதியில் குடியிருக்கவில்லை என்றாலும், பாலார்பதியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக்கொண்டார்.**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி